செய்தி வெளியீடு எண்: 335 நாள் : 10.07.2015

## எதிர்வரும் சவால்களை சந்திக்கும் ஆற்றலைப் பெறும் வழி வகைகளைத் தமிழுக்கு அளித்து வருகிறார்
## மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்

“தொல்மொழிகளில் இன்றும் பேச்சு வழக்கில் இருந்து வரும் ஒரே மொழி நம் தமிழ்மொழியாகும். அத்தகைய தமிழ்மொழியை நம் உயிரெனப் பேணிக் காத்து, எதிர்வரும் நூற்றாண்டுகளின் சவால்களை எதிர்கொள்கின்ற ஆற்றலையும் அறிவையும் அளிப்பதே இன்றைய நமது கடமை” என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுறுத்தியதை ஏற்றுச் செயல்படுத்துவது இளைய தலைமுறையின் கடமையாகும் என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

தரமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சார்பில், இரண்டு நாள் இலக்கணப் பயிற்சிப் பட்டறை வெள்ளிக்கிழமை நிறைவு பெற்றது. அந்நிகழ்ச்சியில் அவர் சிறப்புரை ஆற்றியதாவது:

நவீன இலக்கிய வளர்ச்சி வேகமாகி வருகிறது. இன்றைய ஊடகங்களில் பல்வேறு இலக்கிய வகைகளும் உருவாகி வருகின்றன. இன்றைய ஊடக வளர்ச்சியை ஒட்டி, இலக்கியத்தில் புதிய வகைகள் உருவாகியுள்ளன. உரை நடை இலக்கியமாக புதினம் எனப்படும் நாவல், குறுநாவல், சிறுகதை, குறுங்கதை, நகைச்சுவைத் துணுக்கு, துணுக்கு, நேர்காணல், கடித இலக்கியம், செய்திக் கட்டுரை என இலக்கிய வகைகள் புதிய வடிவங்களைப் பெற்றுள்ளன.

அதுபோல், கவிதையில் படிமம், சர்ரியலிசம் போன்ற கோட்பாடுகளும், ஹைகூ போன்ற வடிவங்களும் பெருகிவிட்டன.

இவ்வகை இலக்கியங்களை வகைப்படுத்தவும் நெறிப்படுத்தவும், தொகுக்கவும் நவீன இலக்கியத்துக்கு ஏற்ப இலக்கணத்தை வல்லுநர்கள் வகுக்க வேண்டும். அப்போதுதான், தமிழ் மொழிக்கு இலக்கண வளத்தைச் சேர்க்க முடியும்.

நவீன இலக்கியத்திற்கென புதிதாக இலக்கணத்தை வல்லுநர்கள் வகுக்க வேண்டும்.

அத்தகைய முயற்சிக்கு இலக்கணப் பயிற்சிப் பட்டறை அடிப்படையாகத் திகழவேண்டும். இதில் பங்கேற்று, பயிற்சி பெறும் இளைஞர்கள் புதியனவற்றையும் உருவாக்கும் திறனை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

சொல்லுக சொல்லை பிறிதோர் சொல் அச்சொல்லை

வெல்லும் சொல் இன்மை அறிந்து (குறள் 645)

என்கிறார் திருவள்ளுவர்.

ஒருவர் கூறும் சொல், அதை விடச் சிறந்த சொல் இல்லை என்ற வகையில் அமைந்திருக்க வேண்டும் என்பது இக்குறளின் உட்கருத்து.

எழுத்துகளால் ஆனது சொல். அச்சொல் சரியான வகையில் வெளிப்பட வேண்டும். அச்சொல் சரியான பொருளில் கூறப்படவேண்டும். அது சீராக அமையவேண்டும். அவ்வாறு கூறுவதற்கு ஏற்ப நயமாக அமையவேண்டும். அப்போதுதான், சொல்ல வந்த சொல் வெற்றி பெறும். இதுதான் அக்குறளின் விரிவான பொருள்.

தமிழின் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து வகை இலக்கணக் கூறுகளும் இந்தக் குறட்பாவில் அடங்கியுள்ளன.

எழுத்துகள் சேர்ந்து அமைவது சொல். அச்சொல் ஏதாவது ஒரு பொருளுடன்தான் இருக்கவேண்டும். அதுவும் அச்சொல் சீரான ஓசையில் அமைந்திருக்க வேண்டும். இதுதான் யாப்பு. அந்தச் சொல் அணிகலனைப் போல் கவரும் வகையில் அமைந்திருக்க வேண்டும். அதுதான் அணி இலக்கணம்.

ஒரு நாட்டில் முழுமையான ஆட்சித் திறன் செயல்பட்டால், அந்நாட்டில் சட்டம் முழுமையாக அமைந்துள்ளது என்பது பொருள். நமது நாட்டில் வலிமையான அரசியல் அமைப்புச் சட்டம் அமைக்கப்பட்டுள்ளது ஓர் உதாரணமாகும்.

அதைப் போல ஒரு மொழி செம்மையாக இயங்குகிறது என்றால், அந்த மொழியில் அறிவியல் அடிப்படையில் முழுமையான இலக்கணம் அமைந்துள்ளது என்பதே பொருளாகும்.

நமது தமிழ் மொழியில் கிடைத்துள்ள மிகப் பண்டைய இலக்கண நூல் தொல்காப்பியம். அது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் கடைச் சங்க காலத்தில் கிடைத்தது என்பர்.

தொல்காப்பியத்தில் பல இடங்களில் ''என்ப, என்மனார் புலவர்'' என்றெல்லாம் மேற்கோள் காட்டப்படும். இதன் மூலம், தொல்காப்பியத்துக்கு முன்பே பல இலக்கண நூல்கள் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

இலக்கியம் உருவான பிறகே இலக்கணம் வகுக்கப்படும் என்பது உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடு ஆகும். இந்நிலையில், தொல்காப்பியத்திற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் பல இலக்கிய நூல்கள் எழுதப்பட்டு, அவை கடல் கோள்களால் அழிந்திருக்கலாம் என்பது அறிஞர்கள் கருத்து. அதைத் தொடர்ந்து பல இலக்கண நூல்கள் தோன்றியிருக்கும் என அறிஞர்கள் உறுதிபடக் கூறுகின்றனர். நமக்குக் கிடைத்ததில் பழமையான நூல் தொல்காப்பியம் ஆகும்.

ஆங்கிலத்தில், Grammar is simply a reflection of a language at a particular time என்று கூறுகிறார்கள்.

ஒரு மொழிக்கு இலக்கியம் உடலைப் போன்றது. இலக்கணம் என்பது ஆடையைப் போன்றது. நாகரிகம் அடைந்த மனிதனுக்கு ஆடை மிக முக்கியமானது. அதனால்தான், ஆள் பாதி

ஆடை பாதி என்று கூறுகிறார்கள். காரணம், உடை என்பது உடலை மறைப்பது மட்டுமல்ல. உடலைப் பாதுகாப்பதும் கூட. அந்த உடையும் அழகுற அமைந்தால் சிறப்புதான்.

தமிழின் இலக்கண வடிவமைப்பு அத்தகையது. அதில் ஐந்து கூறுகள் இன்றியமையாதவை. தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் என வகை செய்யப்பட்டுள்ளது. பின்னால் வந்த இலக்கண ஆசிரியர்கள் இந்த மூன்று வகைகளுடன் அணி என்ற வகையையும் யாப்பு என்ற வகையையும் வடிவமைத்தனர். இவற்றையும் தொல்காப்பியர் கூறியுள்ளார் என்றாலும், பின்னால் வந்தவர்கள் விரிவாகக் கூறியுள்ளனர்.

ஒரு மொழியின் ஓசைகளைத் தனித்தனியாகக் குறிப்பிடுவது எழுத்துகள். அந்த எழுத்துகள் முறையாகவும் சீராகவும் தொகுக்கப்படும்போது, சொற்கள் என ஆகின்றன. அந்தச் சொற்கள் இடத்துக்கு ஏற்பவும் சூழலுக்கு ஏற்பவும் வெவ்வேறு கருத்தைத் தரும்போது, பொருள் என்று ஆகிறது.

அந்தச் சொற்களைக் கொண்டு கருத்துகளைக் கூறும் இலக்கியம் உருவாகும்போது, அதற்கென நடை உருவாகிறது. அதுவே யாப்பு ஆகும். அந்தக் கருத்துகளை இலக்கியம் சுவைபடக் கூறும்போது அணி என்ற இலக்கணம் உருவாகிறது.

நமது அன்றாட வாழ்விலேயே இவை அனைத்தும் எளிதாகவே அமைந்துவிடுகின்றன.

‘‘குன்றென நிமிர்ந்து நில்’’ என்பது மகாகவி பாரதியின் புதிய ஆத்திசூடியில் வரும் ஒரு தொடர். இத்தொடரில், 11 எழுத்துகள் உள்ளன. மூன்று சொற்கள் உள்ளன. ‘‘இளைஞன் நிமிர்ந்து நிற்க வேண்டும்’’ என்ற பொருள் உள்ளது. ஆத்தி சூடி போல ஒரே வரிப் பாடலாக யாப்பு அமைந்துள்ளது. ‘‘குன்றினைப் போல நிமிர்ந்து நிற்க வேண்டும்’’ என்று உவமையுடன் கூறுவதால், அணியும் அமைந்துள்ளது.

இதுதான் தமிழின் மிகப் பெரிய சிறப்பு. இதுபோல் சுருக்கமாகவும் ஐந்து இலக்கணங்களும் கொண்ட இலக்கியப் படைப்புகள் ஏராளமாக இருக்கின்றன.

அது மட்டுமின்றி, ஒவ்வொரு சொல் மாறுபடும்போது, வெவ்வேறு பொருள் கிடைக்கிறது. வால் என்பது ஒரு பொருள். வாழ் என்பது இன்னொரு பொருள். வாள் என்பதற்கு வேறொரு பொருள்.

அது மட்டுமல்ல, ஆங்கிலம் போன்ற மொழிகளில், ஒரு தொடருக்கு குறைந்தது இரு சொற்களாவது தேவை.

தமிழில் வந்தான் என்ற ஒரே சொல் மட்டுமே வருதல் என்ற தொழில் மட்டுமின்றி, படர்க்கை, இறந்த காலம், ஆண்பால், ஒருமை ஆகிய அனைத்தையும் விளக்கிவிடுகிறது. அது தன்னிச்சையாக செயல்படுகிறது. தமிழின் மேன்மைக்கும் சிறப்புக்கும் இவையெல்லாம் எடுத்துக்காட்டுகள் ஆகும்.

ஒற்று, புணர்ச்சி எனப் பல இலக்கணக் கூறுகள் சொற்களை மேம்படுத்தும் கருவியாக அமையும்.

எடுத்துக் காட்டாக, ‘மலர் கூந்தல்’ என ஒற்று இல்லாமல் வரும் தொடர், ‘மலர்ந்த கூந்தல், மலர்கின்ற கூந்தல், மலரும் கூந்தல்’ என வினைத் தொகையாக அமைந்திருக்கும். அதையே ஒற்று சேர்த்து, ‘மலர்க் கூந்தல்’ என்றால், ‘மலர்கள் சூடப்பட்ட கூந்தல்’ என்ற பொருள்படும்.

பிற மொழிகளில் இத்தகைய சிறப்புகள் பல இல்லை. இதுதான் தமிழின் இலக்கணத்தின் மேன்மை.

இலக்கணம் என்பது அறிவியல். அதை மாற்ற முடியாது. ஆனால், புதிது புதிதாக இலக்கணக் கூறுகள் உருவாகிக் கொண்டிருக்கும்.

தமிழில் இலக்கியப் படைப்புகள் தொடக்க காலத்தில் செய்யுள் வடிவிலேயே அமைந்திருந்தன. அதைப் போல் இலக்கணமும் எழுதப்பட்டது. பின்னாளில் உரைநடை இலக்கியம் உருவானது போல, இலக்கணமும் உரைநடை வடிவத்தைப் பெற்றது.

நன்னூல் ஆசிரியர் பவணந்தியார், அகப்பொருள் ஆசிரியர் நம்பி, அணியிலக்கண ஆசிரியர் தண்டி ஆவார். இதுபோல் உரைநடைக் காலத்தில் வீரமாமுனிவர் செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் ஆகியவற்றை படைத்தார்.

இவ்வாறு அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்கள் பேசினார்கள்.

நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் கா.மு. சேகர், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன், மொழி பெயர்ப்புத் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன தனி அலுவலர் திரு. மார்ட்டின் செல்லத்துரை, நிறுவன பதிப்புத்துறை பேராசிரியர் ஆ. தசரதன் மற்றும் கல்லூரி , பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**